மாகாணத் திறைசேரி – வடமாகாணம்
Provincial Treasury – Northern Province
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

My No:-NP/09/FRM/ 2011 Date:- 29.07.2011

மாகாணத் திறைசேரி சுற்று நிருப இல:- PT/08/2011

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**<u>செய்முறைப் பயிற்சிக்காக பயிலுனர்களை அரச நிறுவனங்களில் இணைப்புச் செய்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பான 12/2000(111)ம் இலக்கமும், 22.06.2011ம் திகதியும் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் **01.06.2011** தொடக்கம் மேற்படி பயிலுனர்களின் பயிற்சிக்காக நாளாந்தம் ரூபா.300/= செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக வேறு எவ்வித படியோ அல்லது உழைப்பூதியமோ செலுத்தப்படலாகாது.

செய்முறைப் பயிற்சிகள் யாவும் ஆறு(06) மாதங்களிற்கு மேற்படலாகாது.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி,
வட மாகாணம்.

பிரதிகள்:- (தகவலுக்காக)

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொது நிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு – வ.மா



79/2 Rakka Road, Chunddukuli, Jaffna.
Phone No. DCS(F) Direct 021 2220850 Fax 021 – 2220853 General No – 021 – 2220854
E-Mail – npctreasury@gmail.com

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2000 (III)

எனது இல: EST/8/ALLOW/04/2060-1
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07
2011 யூன் மாதம் 22 ஆம் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள், மற்றும்
திணைக்களத்தலைவர்கள்.

செய்முறைப் பயிற்சிக்காக பயிலுநர்களை அரச நிறுவனங்களில் இணைப்புச் செய்தல்.

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2000-07-19 ஆம் திகதிய 12/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியை திருத்தி வெளியிடப்பட்ட 2006.08.03 ஆம் திகதிய 12/2000 (I) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அதன் மூலம் திருத்தப்பட்ட 05 ஆம் பந்தி மீண்டும் பின்வருமாறு திருத்தப்படுவதுடன், குறித்த திருத்தம் 2011 யூன் 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.

> "05 தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பயிற்சிகளுக்காக நாளாந்தம் ரூபா 300/= படி செலுத்த முடியுமானதுடன், அதற்கு மேலதிகமாக வேறு எதுவித படியோ அல்லது உழைப்பூதியமோ செலுத்தப்படலாகாது."

03. அதேபோன்று 12/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப வகுதியின் செய்முறைப் பயிற்சிகள் தவிர்ந்த மற்றைய செய்முறைப் பயிற்சிகள் யாவும் 06 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட வேண்டும்.

04. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

பீ.வீ.அபேகோன்
செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

Public Administration Circular 12/2000(III)

My No: EST/8/ALLOW/04/2060-1
Ministry of Public Administration and
Home Affairs
Independence Square
Colombo 07
22 July 2011

Secretaries to Ministries
Chief Secretaries of Provincial Councils and
Heads of Departments

**Attachment of Trainees to Public Institutions for Practical Training**

Your attention is hereby drawn to the Public Administration Circular No 12/2000 (I) dated 03.08.2006 which was issued revising para 5 of the Public Administration Circular 12/2000 dated 19.07.2000

02. Para 5 which was revised by the aforementioned circular shall be revised again as mentioned below.

> "05. A daily allowance of Rs.300/- for a trainee may be paid only if necessary provisions are available and no other allowance or remuneration should be paid."

03. Further, all the other practical trainings should be limited to a period of six months, except the practical training in technical category mentioned in para 06 of Public Administration Circular 12/2000. This revision shall come in to effect from 1 st June 2011

04. This circular is issued with the concurrence of the General Treasury.

Sgd/ P.B Abeykoon
Secretary,
Ministry of Public Administration and
Home Affairs